**செய்தி வெளியீடு எண் : 689** **நாள் : 11.04.2023**

தஞ்சாவூர் மாவட்டத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், மேலவெளி கிராமம், பரிசுத்தம் நகரைச் சேர்ந்த திரு.இளங்கோவன் த/பெ.பிச்சையா (வயது 56) என்பவர் கடந்த 3.4.2023 அன்று பள்ளியேறி கிராமத்திலுள்ள தனியாருக்கு சொந்தமான வயல் வழியாக சென்றுகொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக அங்கு மின்கம்பி மூலம் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த திரு.இளங்கோவன் அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in